## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C.)

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | STC – 861/2024 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | லதா |
| Father Name | : | அருள்குமார் |
| Village | : | வாழநாயக்கன்பாளையம் |
| Taluk | : | ஈரோடு |
| Age | : | 47 |

**Accused absent. Cr.P.C 317 petition filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 20.07.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வாழநாயக்கன்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 23.06.2024 ஆம் தேதியன்று முத்தூர் – நத்தகாடையூர் ரோடு குட்டப்பாளையம் அருகே டாடா ஏஸ் வாகனத்தில் நானும் எனது மகன்கள் சுகுமார், ஆதித்யா, அக்கா தேவி, எனது அண்ணன் விஸ்வநாதன் , மாமா சாமிநாதன், கணவர் அருள்குமார் அக்கா கணவர் சின்னசாமி ஆகியோர் சென்று கொண்டிருந்தோம். அப்போது ரோட்டில் கிடந்த தேங்காயை எடுக்க வந்தவர்மீது வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு விட்டது. இந்த விபத்தில் நான் மயக்கமடைந்து விட்டேன். பின்னிட்டு அவருக்கு காயம் ஏற்பட்டதென்று தெரிந்துகொண்டேன். எனக்கு கையில் அடிபட்டது. இந்த விபத்தில் எங்கள் அனைவருக்கும் காயம் ஏற்பட்டது. பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் காங்கேயம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். பின்னிட்டுமேல்சிகிச்சைக்காக ஈரோடு பரணி பாவேந்தர் மருத்துவமனையில் சேர்ந்தோம். நான் ஒரு மாத காலத்திற்கு மேலாக சிகிச்சையில் இருந்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை

23.06.2024 ஆம் தேதியன்று நான் உறவினர் வீட்டிற்கு சென்றேனா என்றால் சரிதான். நான் வாகனத்தின் பின்புறம் உள்ளே உட்கார்ந்திருந்தேன் என்றால் சரிதான். நான் சென்ற வாகனம் மெதுவாக தான் சென்றது என்றால் சரிதான். நாங்கள் சென்றது கிழக்கிலிருந்து மேற்காக என்றால் சரிதான். தேங்காயானது சாலையின் இடது புறம் இருந்தது என்றால் சரிதான். தேங்காய் எடுக்க வந்தவர் மேற்கிலிருந்து கிழக்காக வலதுபுறமாக வாகனத்துடன் வந்து தேங்காயை எடுக்க நின்றார் என்றால் சரிதான். தேங்காய் எடுக்க வந்தவரால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி சட்ட விதிகளுக்கு உட்பட்டு மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் சரிதான். விபத்து நஷ்டஈடு பெறவேண்டி அ.சா 1 கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.07.20 11:05:23 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்